# பாசப்பிணைப்பு

## பாசப்பிணைப்பு என்பது....................

- குழந்தைகளுக்கும், பிள்ளைகளுக்கும், அவர்கள் மீது அன்புகாட்டுபவர்களுக்கும் இடையில் மனோரீதியாக ஏற்படும் அன்பு செறிந்ததோர் பாசப்பிணைப்பு.
- பிள்ளைகளுடன் அன்பைப் பரிமாறி அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

உலகமெங்கிலுமுள்ள குடும்பங்கள், சமூகத்தவர்கள் யாவரும் வித்தியாசமான முறைகளில் இப் பற்றுதலைக் காண்பிக்கிறார்கள். நாங்களும் இதனை மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளமுடியும்.

## பாசப்பிணைப்பு மிகவும் முக்கியம். ஏனெனில்.................

- பிள்ளைகள் அன்பானவர்களாகவும் நம்பிக்கையுள்ளவர்களாகவும், பாதுகாப்புடனும் வளர உதவியாக இருக்கும்.
- இது பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உதவியாக இருக்கும்.

## இதற்கு உதவியாக நாங்கள் செய்யக் கூடியவை என்னென்ன?

### குழந்தைகள்:

- நாள் தோறும் அடிக்கடி குழந்தையைத் தொட்டு, அணைத்து, முத்தமிட்டுத் தூக்கி வைத்திருக்கலாம்.
- பாலூட்டும் போது குழந்தையை அரவணைத்து வைத்திருக்கலாம்
- குழந்தையின் கண்களுக்குள் பார்த்துப் புன்னகை செய்யலாம்.
- எண்ணெய் தடவிக் குழந்தையின் உடலை வெதுவெதுப்பான கரங்களால் தேய்த்து விடலாம்.
- உங்களது குழந்தை அழுதால், உடனே தூக்குங்கள். இப்படிச் செய்வதனால் தன் மீது உங்களுக்கிருக்கும்அன்பையும், தேவை ஏற்படும் போது நீங்கள் உடனிருப்பீர்கள் என்பதையும் குழந்தை புரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

2000 May be photocopied with acknowledgement to the Multicultural Perinatal Network
c/o 416-397-4699 Toronto Public Health

- குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுங்கள். குழந்தை உங்களது குரலை அடிக்கடி கேட்-பது மிகவும் அவசியம்.
- மிருதுவானகுரலில்குழந்தையுடன் பேசுங்கள். ஏனெனில் உங்களது மொழி புரியாவிட்-டாலும் மிருதுவான குரலொலியைக் குழந்தை விரும்பும்.
- நீங்கள் உங்களுடைய காரியங்களைக் கவனிக்கும் போது ஒரு தூக்கியை அணிந்து அதனுள் குழந்தையை அமர்த்தி உங்களுடனேயே வைத்திருங்கள். ஏனெனில் தாயின் உடல் ரீதியான சமபந்தமும் அண்மையும் குழந்தைக்கு மிகவும் முக்கியம்.

## இளம் பிள்ளைகள்:

- உங்களது குழந்தைக்குக் கதைகளை வாசித்துக் காட்டுங்கள். மடியில் உட்கார வைத்து அரவணையுங்கள். இளம் பிள்ளைகளுக்கு எதுகைமோனையோடு அமைந்த சொற்களும், பிரகாசமான நிறங்களில் படங்கள் உள்ள புத்தகங்களும் பிடிக்கும்.
- பிள்ளைகளுடன் சேர்ந்து பலவிதமான விளையாட்டுக்களை விளையாடி நன்றாகச் சிரித்து மகிழுங்கள்.
- அமைதியான சமயங்களை அநுபவித்து ரசியுங்கள். குழந்தையோடு ஆடுகதிரையில் அமர்ந்து ஆடி மிருதுவான குரலில் பாடுங்கள்.
- குழந்தையை அரவணைத்து முத்தமிடுங்கள். இளம் பிள்ளைகள் தாங்கள் நேசிக்கப் படுகிறார்கள் என்பதையும், அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டு என்பதையும் உணர வேண்டும்.
- உங்களுடைய குழந்தைக்குப் புதிய வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்துப் பயிற்சி அளியுங்கள்
- நீங்கள் சொல்லிக் கொடுத்ததைத் திருப்பிச் சொல்லும்படி ஊக்கப் படுத்துங்கள்.
- பாட்டுக்களைப் பாடுங்கள். உங்களுக்குப் பிடித்தமான இசையை ரசித்துப் பிள்ளை யுடன் சேர்ந்து நடனமாடுங்கள்.
- உங்கள் பிள்ளை உங்களுடன் பேசும்போது செவிசாய்த்து அவர் மீது கூடிய கவனமு ம் ஈடுபாடும் செலுத்துங்கள்.

2000 May be photocopied with acknowledgement to the Multicultural Perinatal Network
c/o 416-397-4699 Toronto Public Health